# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.287/2025.
Prosecution witness for P.W. 7 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. பவுலா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026.

A2 produced through V.C. Others absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் நீதித்துறையில் பணியில் இருந்து ஓய்வு பெற்று பெரியநாயகபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்தபோது 05.09.2013 அன்று சிப்காட் காவல்நிலைய குற்ற எண் 264/2013 வழக்கு சம்பந்தப்பட்ட ரத்தக்கறை படிந்த தள ஓடுகள் 3 துண்டு, ரத்தக்கறை படியாத தள ஓடுகள் 2 துண்டு, ஆரஞ்சு, பச்சை, வெள்ளை நிறமுள்ள ரத்தம் படிந்த திரைச்சீலை ஒன்று, ரத்தக்கறை படிந்த காக்கி நிற பேண்ட் ஒன்று, டக்ஹெட் என்று லேபிள் ஒட்டப்பட்ட வெள்ளை நிற முழுக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த கிழிந்த காட்டன் துண்டு, ரத்தக்கறை படிந்த காட்டன் துண்டுகள் இரண்டு, முழுவதும் எரிந்த நிலையில் கழுத்து பகுதி மட்டும் எரியாத நிலையில் உள்ள சிவப்பு நிற டீ சர்ட்டின் 3 துண்டுகள், முழுவதும் எரிந்த நிலையில் உள்ள சிவப்பு நிற ஜட்டியின் பின்பகுதி அதோடு ஒட்டிய ஜீன்ஸ் பேண்ட்டின் பின்பகுதியும், அதோடு சீனி ஒட்டியுள்ளது, TN 30 B 1314 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம், கொம்பு கைப்பிடியுள்ள கூரிய கத்தி ஒன்று, கொம்பு கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி, ரோஸ்

நிறத்தில் S டாலர் தொங்கும் கைப்பிடியுடன் கூடிய சிறிய சில்வர் மடக்கு கத்தி ஒன்று, இரும்பு கம்பி ஒன்று ஆகியவற்றை மேற்படி நீதிமன்றத்தில் பெற்று அவற்றிற்கு PR.No.159/2013 என்ற எண்ணிட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைத்தேன். அந்த படிவங்கள் 91 **அ.சா.ஆ 14 வரிசை** (எண்ணிக்கையில் 6). பின்னிட்டு மேற்படி வழக்கு சொத்துக்களை ரசாயன பரிசோதனைக்காக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேன்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.25 19:47:56 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.287/2025.
Prosecution witness for P.W. 8 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. ஜான்சி சேவியர் ராணி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026.

A2 produced through V.C. Others absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு சங்கரபேரி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 26.08.2013 அன்று தாளமுத்துநகர் போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் சங்கரப்பேரி கிராம எல்லைக்குட்பட்ட ஓம்சாந்தி நகர் கதவு எண் 4/99 எம் என்ற கதவு எண் கொண்ட வீட்டில் சிலபேர் சேர்ந்து காளிமுத்து என்பவரை கொலை செய்து தடயத்தை மறைப்பதற்காக பிரேதத்தை கமாக் பள்ளியின் பின்புறமாக பிரேதத்தை போட்டு KSPS என்ற தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான இடத்தில் போட்டு தீ வைத்து எரித்துள்ளார்கள். எரிந்த பிரேதம் இருந்த இடமும் சங்கரப்பேரி கிராம நிர்வாக எல்லைக்குட்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.25 19:48:03 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.287/2025.
Prosecution witness for P.W. 9 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுப்பையா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026.

A2 produced through V.C. Others absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது சூரங்குடி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 26.08.2013 அன்று காலை சுமார் 9 மணியளவில் நிலைய குற்ற எண் 247/2013 இதச 147, 148, 302, 201, 506(2) பிரிவுகள் படியான முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக பெற்று தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் மாலை 5 மணியளவில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.06.25 19:48:10 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.287/2025.
Prosecution witness for P.W. 10 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. ஜெயராணி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026.

A2 produced through V.C. Others absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு சிப்காட் காவல்நிலையத்தில் 27.08.2013 அன்று முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 264/2013 இதச 147, 148, 302, 201, 506(2) பிரிவுகள் படியான வழக்கின் முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக பெற்று அதை தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் ஒப்படைத்தும். பின் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு ஒப்படைத்தும், பின்னர் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.25 19:48:17 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.